# இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டையும் சமூக இணக்கத்தையும் பேணுவதில் முஸ்லிம்கள்: சுதேசிய மன்னராட்சிக் காலம் முதல் சிவில் யுத்தத்துக்குப் பின்னரான காலம் வரை

**Dr. Athambawa Sarjoon**

Senior Lecturer, Department of Political Science, University of Peradeniya, Sri Lanka.

*sarjoona@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

*இலங்கையில் உள்ளூர் யுத்தம் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் சிறுபான்மை முஸ்லிம்களின் வரலாறு, இனத்துவம், மத அடிப்படைகள் மற்றும் நடைமுறைகள் என்பன பெருமளவுக்கு விமர்சனத்துக்கும் கேள்விக்கும் உட்படுத்தப்படுகின்றன. மேலும் தேசிய ஒருமைப்பாட்டையும் சமூக இணக்கத்தைப் பேணுவதில் முஸ்லிம்களின் அர்ப்பணிப்பு குறித்தும் விமர்சனங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. இக்கட்டுரை இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டையும் சமூகங்களுக்கு இடையிலான இணக்கத்தையும் கட்டிக் காப்பதில் முஸ்லிம்கள் ஆற்றி வந்துள்ள வகிபங்களிப்பை மதிப்பீடு செய்வதாக உள்ளது. முழுவதும் இரண்டாம் நிலைத் தகவல்களைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ள இக்கட்டுரை, வரலாறு முழுவதும் காலணித்துவ ஆக்கிரமிப்பாளர்களாலும் வன்முறைக் குழுக்களாலும் அதிகார சக்திகளாலும் முஸ்லிம்கள் பல வழிகளில் விமர்சனங்களையும் தாக்குதல்களையும் எதிர்நோக்கி வந்துள்ள போதிலும் அவற்றுக்கான துலங்கல்களை முஸ்லிம்கள் வன்முறையால் வெளிப்படுத்தாது ஜனநாயக வழியில் அணுகி தேசத்தின் ஒருமைப்பாட்டுக்கும் சமூக இணக்கத்துக்கும் அபகீர்த்தி ஏற்படா வண்ணமே செயற்பட்டு வந்துள்ளனர் என்பதை அடையாளம் கண்டுள்ளது. முஸ்லிம்களின் இந்த வரலாற்று மாண்மியம் நினைவுகூர்ந்து ஏற்றுக்கொள்ளப்படுவதானது போருக்குப் பின்னரான முஸ்லிம்கள் மீதான தப்பபிப்பிராயங்கள் கழையப்படுவதற்கும் இனக்குழுக்களுக்கிடையேயான நல்லிணக்கச் செயன்முறை வெற்றியடைவதற்கும் மிகவும் அவசியமானது என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.*

**பிரதான சொற்கள்:** தேசிய ஒருமைப்பாடு, சமூக இணக்கம், இலங்கை முஸ்லிம்கள், முஸ்லிம் எதிர்ப்புணர்வும் வன்முறையும், சகவாழ்வு.

## 1. அறிமுகம்

இலங்கையின் குடித்தொகையில் இரண்டாவது சிறுபான்மையினராக வாழும் முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர். அரேபியா துணைக்கண்டம், இந்தியா மற்றும் மலே தீபகற்பத்தை பூர்வீகமாகக் கொண்டிருக்கும் இவர்களின் பரம்பரையினர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கையில் குடியேறியுள்ளனர் (Yusoff, Hussin & Sarjoon., 2014; Ali, 2014; Deveraja, 1996). ஆரம்ப காலம் முதலே உள்ளூர் மக்களுடன் நேசம்கொண்டு சகவாழ்வு வாழ்ந்து வந்துள்ளனர். அவ்வாறே, சுதந்திர இலங்கையிலும் முஸ்லிம்கள் மற்றய இனக்குழுக்களுடன் ஒன்றிணைந்து தேசிய மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டை பேணும் வகையிலும் வாழ்ந்துள்ளமைக்கு வரலாற்றுப் பதிவுகள் சான்று பகர்ந்து நிற்கின்றன. ஆனாலும், அண்மைக் காலமாக குறிப்பாக உள்ளூர் யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில், முஸ்லிம்களின் பூர்வீகம் மற்றும் அவர்களின் தேசப்பற்று மற்றும் தேசத்துக்காக பங்களிப்பு குறித்து விமர்சிக்கப்பட்டு வந்துள்ளமை நோக்கத்தக்கது.

இந்தக்கட்டுரை இலங்கையில் சுதேசிய மன்னர்களின் ஆட்சிக்காலம், காலணித்துவ ஆட்சிக்காலம் மற்றும் சுதந்திரத்துக்குப் பின்னரான ஆட்சிக்காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்குமிடையிலும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக இணக்கம் ஆகியவற்றைக் கட்டிக் காப்பதில் முஸ்லிம்கள் ஆற்றிவந்துள்ள பங்களிப்பை மதிப்பீடு செய்ய முயற்சிக்கிறது. உண்மையில், பல்வேறு காலகட்டங்களிலும் இக்கட்டான சூழலிலும் தம் சமூகம் மீதான பல்முனைத் தாக்குதல்களுக்குள்ளும் நெருக்கடிகளுக்குள்ளும் சமூக, காலாசார, பொருளாதார

மற்றும் அரசியல் விவகாரங்களில் முஸ்லிம்கள் ஆற்றிய பங்களிப்பு பற்றியும் நாடு எதிர்நோக்கிய இக்கட்டான சூழ்நிலைகளில் தேசத்தின் கௌரவத்தையும் ஒருமைப்பாட்டையும் சமூக இணக்கத்தையும் கட்டிக்காக்கும் நோக்கில் முஸ்லிம் குடிமக்களும் அரசியல் தலைவர்களும் நடந்துகொண்ட விதம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதையும் வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். முழுவதும் இரண்டாம் நிலை தகவல்களைக் கொண்டமைந்துள்ள இவ்வாய்வுக் கட்டுரையானது அரசியல் நிகழ்வுகளையும் அரசியற் சொல்லாடல்களையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி வியாக்கியானம் கொடுத்ததன் ஊடாக இலங்கைத் தேசத்தில் முஸ்லிம்களின் வகிபங்கின் வரலாற்றை மதிப்பிட முயற்சிக்கிறது.

## 2. சுதேசிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் சமூக இணக்கத்துக்கும் தேசிய அபிவிருத்திக்குமான முஸ்லிம்களின் பல்துறைப் பங்களிப்பு

இலங்கையில் சுதேசிய மன்னர்களது ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள் (குறிப்பாக அரேபிய வர்த்தகர்கள்) இலங்கையில் வியாபார நோக்காக வந்து சென்ற சந்தர்ப்பத்திலும் பிரதான கரையோர வர்த்தக நகரங்களில் நிரந்தரமாகக் குடியேறி வாழ்ந்த சந்தர்ப்பத்திலும் அதிகமான சலுகைகளையும் உரிமைகளையும் அனுபவித்து வாழ்ந்திருப்பதனை வரலாற்றுச் சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. தமது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவோராகவும் தமக்குத் தேவையான பொருட்களை நாட்டிற்குள் கொண்டுவருவோராகவும் முஸ்லிம் வர்த்தகர்கள் இருந்ததனால் இந்நாட்டு மன்னர்களும் சுதேசிய மக்களும் முஸ்லிம்களுடன் சிநேக உறவு கொண்டே வாழ்ந்து வந்துள்ளனர் (சர்ஜூன், 2017).

முஸ்லிம்கள் இலங்கையில் பல துறைமுக நகரங்களில் ஆட்சியாளர்களினால் சலுகைகளைப் பெற்று தமது தொழில் நடவடிக்கைகளை சிறப்புற மேற்கொண்டிருந்துள்ளார்கள். சேர்.அலெக்ஸாண்டர் ஜோன்சன் சுட்டிக்காட்டுவதுபோல் இலங்கை மன்னர்களிடம் அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கின் மூலம் முஹம்மதியர்கள் தங்கள் வர்த்தக் கடலாண்மை வழக்குகளை முஹம்மதிய மத அறிஞர்களையும் வர்த்தகர்களையும் கடலோடிகளையும் உள்ளடக்கிய ஓர் உயர் மன்றத்தால் விசாரிக்கப்படக்கூடிய சிறப்புரிமையை சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து பெற்றிருந்தனர். இது முஸ்லிம்கள் சுதேசிய மன்னராட்சிக் காலத்தில் பெற்றிருந்த உயல் நிலையினையே சுட்டிக்காட்டுகிறது (Abdul Azeez, 1907). அக்காலத்தில், இலங்கையின் முக்கிய துறைமுகங்கள் அனைத்தும் முஸ்லிம் வர்த்தகர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்திருக்கிறது. அத்துறைமுகங்களுக்கு ஊடாக உலகின் கிழக்குக்கும் மேற்குக்குமான வணிகப் போக்குவரத்தின் புதிய தளமாக இலங்கையை முஸ்லிம்கள் மேலோங்கச் செய்திருந்தனர் (சர்ஜூன், 2017).

மன்னராட்சிக் காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் பல துறைகளில் தங்களது பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள். ‘தவளம்’ என அழைக்கப்பட்ட மாடுகளைக் கொண்டு பிணைக்கப்பட்ட வண்டிகள் மூலம் பொருட்களை ஏற்றி வணிகம் செய்யும் முறையை இலங்கையில் முஸ்லிம்களே அறிமுகப்படுத்தியுள்ளனர் (சுக்ரி, 1995). இதன் மூலமாக காலணித்துவ ஆட்சியாளர்களான போத்துக்கீசர் மற்றும் ஒல்லாந்தர் காலங்களில் துறைமுகங்கள் ஊடாக வர்த்தகம் செய்யமுடியாமல் போனபோதும் கூட உள்ளூர் இராஜ்ஜியங்களிலிருந்து ‘தவளம்’ மூலம் வியாபார நடவடிக்கைகளை இம்முஸ்லிம்கள் மேற்கொண்டுள்ளனர். குறிப்பாக, கண்டி இராஜ்ஜியத்துடனான முஸ்லிம் வணிகர்களின் உறவு மேலோங்கி இருந்ததனை அவதானிக்க முடிகிறது. இதனால், போத்துக்கீசர்களினால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை அப்போதைய கண்டிய இராஜ்ஜிய மன்னரான செனரத் (1604-1635) 1626 இல் கண்டியின் உட்புற நகரங்களிலும் கண்டி இராஜ்ஜியத்தின் கட்டுப்பாட்டின் கீழிருந்த மட்டக்களப்பு கரையோரப் பகுதியிலும் குடியேற்றியுள்ளார். மட்டக்களப்பு பகுதியில் மாத்திரம் 4,000 முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டதாக அறிய முடிகிறது (Ali, 2014; Deveraja, 1994:67). இது கண்டி மன்னருடனும் சுதேசிய சிங்கள மக்களுடனும் முஸ்லிம்கள் கொண்டிருந்த நல்லுறவின் வெளிப்பாட்டையே சுட்டிக் காட்டுகிறது.

உண்மையில், வர்த்தக ரீதியாக மன்னராட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் மேல்நிலை பெற்றிருந்ததனையும் இலங்கையின் வர்த்தகச் செயற்பாடுகளுக்கு முஸ்லிம்கள் உறுதுணையாக இருந்துள்ளார்கள் என்பதனையும் வரலாற்றுச் சான்றுகள் சுட்டிக் காட்டுகின்றன. அவ்வாறே, அரசியலிலும் மன்னராட்சி காலத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்த உயர் நிலையும் அடையாளப்படுத்த வேண்டிய ஒன்றே. முஸ்லிம்களின் வர்த்தகத்திலும்

வாய்மையான செயற்பாட்டிலும் நம்பிக்கை கொண்ட இலங்கை மன்னர்கள் தமது இராஜ்ஜியக் கடமைகளில் முஸ்லிம்களையும் நம்பிக்கையுடன் சேர்த்திருந்தனர். புவியியல், வரலாற்று ஆசிரியரான அல்-இத்ரீஸ் என்பவர் 12 ஆம் நூற்றாண்டில் எழுதிய தனது 'புவியியல்' எனும் நூலில் பதினாறு அங்கத்தவர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்த இலங்கை அரசனது சபையில் நான்கு முஸ்லிம்கள் அமைச்சர்களாக இருந்தனர் என்ற கருத்தினைச் சுட்டிக்காட்டியிருப்பது நோக்கத்தக்கது (Vamadevan, 1999). தவிர, அவர் மேலும் சுட்டிக்காட்டும் போது அந்த அமைச்சரவையில் நான்கு சிங்களவர்களும் நான்கு முஸ்லிம்களும் நான்கு யூதர்களும் நான்கு கிறிஸ்தவர்களும் இருந்தனர் என்கின்றார். இது இலங்கை அரசர்கள் முஸ்லிம்களையும் ஆட்சியியல் செயற்பாட்டில் சமமானவர்களாகக் நடத்தியுள்ளனர் என்பதனை மேலும் தெளிவுபடுத்துகிறது.

சுதேசிய மன்னர்களது ஆட்சிக் காலத்தின்போது இலங்கை ஆட்சியாளர்கள் சார்பில் பல நாடுகளுக்கு வர்த்தக மற்றும் இராஜதந்திர தூதுக் குழுவினராகவும் முஸ்லிம் பிரதிநிதிகள் சென்றிருப்பதும் நோக்கத்தக்கது. புவனேகபாகு மன்னன் எகிப்துடன் நெருங்கிய வர்த்தகத் தொடர்பினைக் கொண்டிருந்ததோடு 1283 இல் இலங்கையில் ஏற்றுமதி வர்த்தகத்தில் பெரும் பங்குவகித்த முஸ்லிம் ஒருவரை எகிப்துக்குத் தூதுவராக அனுப்பியிருந்ததும் நோக்கத்தக்கது (அமீன், 2000; ரிம்சான் ஹம்தூன், 1998). அவ்வாறே, கண்டிய மன்னன் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உதுமாலெப்பை மௌலாமுகாந்திரம் என்பவரை கர்நாடக நவாப்பாகிய (அரசர்) முஹம்மது அலியிடம் தூதுவராக அனுப்பியுள்ளமையும் 1726 ஆம் ஆண்டு திருகோணமலையிலிருந்து கன்னொருவாவுக்கு வந்த ஆங்கில தூதுவரான ஜோன் பைபஸ் (John Pybus) என்பவரை உபசரித்த அரச பிரதிநிதி ஒரு முஸ்லிமாவார் என்பதும் நோக்கத்தக்கது (Deveraja, 1994:223). இந்திகழ்வுகளானது கப்பலோட்டும் திறமை, சர்வதேசத் தொடர்புகள், பன்மொழிப் புலமை மற்றும் நளினமாகப் பேசும் ஆற்றல் போன்றன முஸ்லிம்களிடத்தில் இருந்ததனால் அவர்களை சிங்கள மன்னர்கள் தமது இராஜ தூதுவர்களாக அனுப்பக் காரணமாயிருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றது.

மேலும், இலங்கை மன்னர்களின் அரண்மனைகளில் முஸ்லிம்கள் அதிகளவில் சேவை செய்து வந்திருப்பதும் நோக்கத்தக்கது. குறிப்பாகக் கண்டிய மன்னின் ஆட்சிக் காலத்தில் வர்த்தகத்தில் மேலோங்கி இருந்தது போலவே இராஜ சேவைகளில் இராணுவ வீரர்களாகவும் அரண்மனை சமையலாளர்களாகவும் அரச மருத்துவர்களாகவும் அரச குளியலறை உதவியாளர்களாகவும் அதிகளவான முஸ்லிம்கள் கடமையாற்றிருப்பதை அறிய முடிகிறது. (பார்க்க: Deveraja, 1994:224-225) தவிர, கண்டிய அரசர்களுடன் காணப்பட்ட சிறந்த உறவு காரணமாக முஸ்லிம்கள் பூரண மத சுதந்திரம் பெற்று வாழ்ந்ததோடு முஸ்லிம்களுக்கு மதஸ்தலங்களைக் கட்டுவதற்கு அரசு நிலங்கள் வழங்கப்பட்டிருந்ததோடு பரிபாலனச் செலவுகளை ஈடுசெய்வதற்கும் அரசு உதவி செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது (அமீன், 2000:28). இவ்வாறாக, சுதேசிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் சுதேசிய மக்களுடனும் சுமூகமான உறவு கொண்டிருந்ததுடன் அவர்களிடத்தில் பெருமதிப்பு மிக்கவர்களாகவும் காணப்பட்டனர்.

இலங்கையில் சுதேசிய மன்னர்கள் ஆட்சிசெய்த காலப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் தாம் அறிமுகம் செய்த யூனானி வைத்தியம், நெசவுத் தொழில், இரத்தினக்கல் பட்டை தீட்டல் தொழில், தவளம் வியாபாரம் மற்றும் போக்குவரத்து போன்றவற்றாலும் இலங்கைச் சுதேசிகளிடத்திலும் மன்னர்களிடத்திலும் செல்வாக்கும் மதிப்பும் பெற்ற ஒரு சமூகமாக வாழ்ந்து வந்தனர். ஆதலால், இலங்கையில் சுதேசிய மன்னர்களின் ஆட்சிக் காலமானது முஸ்லிம்களுக்கு புகழ்பூத்த காலம் என வரையறை செய்யலாம். தமது வர்த்தக நடவடிக்கைகள் காரணமாகவும் மற்றய மதத்தவர்களுடன் நேர்மையாகவும் சாந்தமாகவும் பழகும் அவர்களின் மனோநிலை காரணமாகவும் முஸ்லிம்கள் வர்த்தகத்தில் மேல் நிலையில் இருந்ததோடு சுதேச அரச நிர்வாகத்திலும் இராஜ்ய சேவையிலும் அதிகளவில் பங்களிப்புச் செய்து சக குடியானவர்களான சிங்களவர்கள் மற்றும் தமிழர்களுடன் பல்வேறு துறைகளிலும் சிறந்த உறவினை வளர்த்து முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது கண்கூடு.

## 3. காலணித்துவ ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்கள்: வீழ்ச்சியில் சகவாழ்வு வாழ்தல்

சுதேசிய மன்னர்களது ஆட்சிக் காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு சலுகைகளைப் பெற்று சுதேசிகளுடன் நல்லுறவாகவும் எல்லா நிலைகளிலும் மேலோங்கியும் இருந்ததைப்போல் ஐரோப்பியர்கள் இலங்கையை குடியேற்ற நாடாக ஆட்சி புரிந்த காலத்தில் முஸ்லிம்களால் மேல்நிலையில் திகழ முடியவில்லை. குடியேற்ற ஆட்சியாளர்களின்

முஸ்லிம்களுக்கு எதிரான பல்வேறு சட்டங்கள் மற்றும் திட்டங்களினால் முஸ்லிம்களின் வர்த்தக மற்றும் வியாபார ரீதியிலான செல்வாக்கு வீழ்ச்சியுறத் தொடங்கியதோடு சமய மற்றும் சமூக ரீதியாகவும் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளலாயினர். இந்நிலை பிரித்தானியரது காலத்தில் ஓரளவு குறைந்திருந்தாலும் அவர்களுக்கு முந்திய போத்துக்கீசர் மற்றும் ஒல்லாந்தரது ஆட்சிக்காலமானது முஸ்லிம்களுக்கு இருள் சூழ்ந்தவொரு காலமாகவே இருந்தது என்பதனை வரலாறு சான்றுபகருகின்றது.

இலங்கையில் முதன் முதலாக அதன் கரையோரப் பிரதேசங்களை போத்துக்கீசர் கி.பி 1505 ஆம் ஆண்டு வந்தடைந்தனர். அப்போது கரையோர நகரங்களில் விசேடமாக துறைமுக நகரங்களின் வியாபார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். இதனால், தமது ஏகாதிபத்தியத்தை நிலைநாட்டுவதற்கும் பொருளீட்டலுக்கும் வந்த போத்துக்கேயருக்கு இம்முஸ்லிம்கள் எதிரிகளாகவே தென்பட்டனர். உண்மையில், சுதேசிகளுடன் தமக்கிருந்த நெருக்கமான உறவைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் தம்மை எதிர்க்கக்கூடும் என்ற அச்சம் கூட போத்துக்கீசருக்குக் காணப்பட்டது. இதனால் போத்துக்கீசர் முஸ்லிம்களை சந்தேகக் கண்கொண்டே நோக்கியதுடன் எதிரி மனோநிலையிலும் செயற்பட ஆரம்பித்தனர். இலங்கையில் நிலவிய அப்போதைய அரசியல் சூழ்நிலை போத்துக்கீசருக்கு சாதகமாக அமைந்ததுடன் அது முஸ்லிம்களுக்கு பெரும் துன்பங்களை ஏற்படுத்தவும் வழிகோலியது. குறிப்பாக, கோட்டை இராஜ்ஜியம் மூன்றாக துண்டாடப்பட்டபோது ஏற்பட்ட அரசியற் குழப்ப சூழ்நிலைகளால் முஸ்லிம்கள் அதிகளவில் வாழ்ந்த கொழும்பு கோட்டைப் பகுதியிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றுவதற்கு சிங்கள ஆட்சியாளர்களை போத்துக்கீசர்கள் நிர்ப்பந்தித்தனர். இதனால், கொழும்பு நகரப் பகுதியை விட்டு வெளியேற்றப்பட்ட ஆயிரக் கணக்கான முஸ்லிம்களில் அதிகளவானவர்களை கண்டிய மன்னன் செனரத் வரவேற்று, கண்டியின் உட்புற நகரங்களிலும் அவரது ஆளுகையின் கீழிருந்த மட்டக்களப்புப் பகுதியிலும் குடியேற்றி முஸ்லிம் மக்களுக்கு அடைக்கலம் கொடுத்திருந்தார். அப்போது கூட முஸ்லிம்கள் தமக்கெதிரான அநியாயங்களுக்காக வன்முறையூடாகவோ அல்லது வாள் ஏந்தியோ போராடவில்லை.

போத்துக்கீசரின் முஸ்லிம்களுக்கு எதிரான தொடர்ச்சியான நடவடிக்கைகள் காரணமாக முஸ்லிம்கள் வர்த்தக ரீதியாக வகித்துவந்த மேல்நிலையானது வீழ்ச்சியடையத் தொடங்கியது. தவிர போத்துக்கீசர்கள் தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் கத்தோலிக்க, கிறிஸ்தவ சமயத்தையும் அதனோடிணைந்த கல்வி முறையையும் பரப்பியதனால் முஸ்லிம்கள் கல்வியின்பால் கவனம் செலுத்துவதும் சவால்மிக்கதாக மாறலானது (ரிம்சான் ஹம்தூன், 1998). இதனால் அறிவியல் மற்றும் ஆன்மீக, கலாசார ரீதியாகவும் முஸ்லிம்கள் சவால்களை எதிர்கொண்ட காலமாகவும் போத்துக்கீசரின் ஆட்சிக்காலம் அமைந்திருந்தது.

போத்துக்கீசரை அடுத்த ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் கூட இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு சவால்களையே எதிர்கொண்டனர். வர்த்தக நடவடிக்கைகள் ஊடாக இலாபத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டிருந்த ஒல்லாந்தர்கள் முஸ்லிம்கள் உள்நாட்டு வர்த்தகத்தில் மேலோங்கி இருந்த நிலையை இல்லாமல் செய்வதற்காக பல்வேறு சட்டங்களைக் கொண்டுவந்து முஸ்லிம்களை வீழ்ச்சியடையச் செய்வதில் கண்ணாகச் செயற்பட்டனர். வர்த்தகத்தை ஒடுக்கும் நோக்கமாக முஸ்லிம்களின் குடியேற்றத்தைத் தடுத்து சுதேச முஸ்லிம்களின் நடமாட்டத்துக்கும் கட்டுப்பாடு விதித்தனர். 1659 இல் ஒல்லாந்தர்களுடன் கூட்டாக பங்குதாரர்களாக மட்டுமே ஏற்றுமதி வர்த்தகத்தில் முஸ்லிம்கள் ஈடுபட முடியும் என்று சட்மியற்றி முஸ்லிம்களின் உள்நாட்டு வர்த்தகம் மற்றும் ஊரூராகச் சென்று பொருட்களை விற்றல் (தவளம் மூலம்) என்பனவற்றுக்கும் தடை விதித்தனர். முஸ்லிம் அல்லாதவர்களுக்கு சுங்க வரிகளிலிருந்து விலக்களித்தும் முஸ்லிம்களுக்கு அதிகளவில் சுங்க வரிகளை விதித்தும் அறவிட்டனர். இந்த நெருக்கடியின் மற்றொரு நடவடிக்கையாக கொழும்பிலும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லிம்களை 1670 இல் அப்பிரதேசங்களிலிருந்து வெளியேற்றிய ஒல்லாந்தர் தமது பொருளாதார நலனில் கவனம் செலுத்தி கோட்டையிலோ அல்லது புறக்கோட்டையிலோ நிலங்களையோ அல்லது வீடுகளையோ முஸ்லிம்கள் வைத்திருக்கக் கூடாது என்று 1747 இல் தடைச் சட்டத்தையும் விதித்தனர் (அமீன், 2000:28). எவ்வாறிருப்பினும், போத்துக்கீசரின் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் அவர்களது ஆளுகைக்கு உட்பட்ட கரையோரப் பகுதியில் முஸ்லிம்கள் ஆட்சியாளர்களின் கொடுமைக்கு உட்பட்டு வாழ்ந்த போதும் கண்டி மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் பல்வேறு சலுகைகளைப் பெற்று வாழ்ந்தனர் என்பது நோக்கத்தக்கது.

ஒல்லாந்தரை வெற்றி கொண்ட பிரித்தானியர் 1796 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களையும் பின்னர் 1815 இல் கண்டிய இராஜ்ஜியத்தையும் கைப்பற்றி முழு இலங்கையையும் தமது ஆளுகைக்குள் கொண்டு வந்தனர். 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் வரை ஆட்சி செய்த இவர்களின் ஆட்சிக் காலத்தில் முன்னைய இரு ஐரோப்பிய தேசத்து காலணித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட சவால்களும் துன்பங்களும் படிப்படியாக குறையலாயின. ஏனைய சுதேசிகளைப் போலவே முஸ்லிம்களது தனித்துவத்துக்கும் கலாச்சாரத்துக்கும் பிரித்தானிய ஏகாதிபதித்திய அரசு அங்கீகாரம் வழங்கலானது. ஒல்லாந்தர் முஸ்லிம்களுக்கு எதிராக விதித்திருந்த சட்டங்கள் பலவற்றை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் நீக்கியமை முஸ்லிம்களின் அகிம்சை வழி செயற்பாட்டுக்குக் கிடைத்த வெற்றியாகும். இது பொருளாதார ரீதியாகவும் அவ்வாறே பின்னரான காலங்களில் அரசியல் ரீதியாகவும் முஸ்லிம்கள் எழுச்சியடைய வழிவிட்டது (பார்க்க: Ali, 2014).

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் தங்களுக்கென அரசாங்க சபையில் ஒரு பிரதிநிதித்துவத்தை கோரியதை அடுத்து, ஆட்சியாளர்கள் அவ்வாறு ஒரு பிரதிநிதித்துவத்தை முஸ்லிம்களுக்கு வழங்க முனைந்த போது அப்போது தேசிய அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்த தமிழ் அரசியல் தலைவர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் அதனை எதிர்த்ததுடன் முஸ்லிம்களும் தமிழர்களே ஆதலால் அவர்களையும் நான் பிரதிநிதித்துவம் செய்கிறேன் என்பதால் அவர்களுக்கு தனியான அரசியல் பிரதிநிதித்துவம் தேவை இல்லை என வாதிட்டார் (பார்க்க: Yusoff et al., 2016; Imtiyaz & Hool, 2011). ஆனாலும், தங்களது பூர்வீகம் மற்றும் இனத்துவ தனித்துவம் கொச்சைப்படுத்தப்பட்ட போதும் கூட அதற்கு மிகவும் சாத்வீகமானதும் அறிவுபூர்வமானதுமான பதிலை வழங்கிய முஸ்லிம் சிந்தனையாளர்களும் தலைவர்களும் பெரும்பான்மையின தமிழ் மக்கள் மீதோ அல்லது அவர்களது தலைவர்கள் மீதோ வன்முறையோ குரோதமோ கொண்டு தமது எதிர்ப்பினை வெளிக்காட்டவில்லை என்பது நோக்கத்தக்கது.

## 4. சுதந்திர விடுதலைப் போராட்ட இயக்கத்தில் முஸ்லிம் தலைவர்களின் பங்களிப்பு

காலணித்துவ ஆட்சியாளர்களின் அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்காக இலங்கையர்கள் மேற்கொண்ட விடுதலை இயக்கச் செயற்பாடுகளில் கூட முஸ்லிம் தலைவர்களின் பங்களிப்பும் தேசத்தின் சுதந்திரத்துக்கான அவர்களின் அவாவும் அதிகமாகவே இருந்துள்ளது. 1915 இல் முஸ்லிம்-சிங்கள இனக் கலவரம் ஏற்பட்டதை அடுத்து முஸ்லிம்-சிங்கள உறவு சற்று சீர்குலைந்திருந்த போதும் சுதந்திரப் போராட்டத்துக்காக தேசிய இயக்கம் உருவாக்கப்பட்ட போதும் அதன் பின்னரான நடவடிக்கைகளிலும் அப்போது தேசிய மற்றும் பிராந்திய அளவில் செல்வாக்குப் பெற்றிருந்த பல முஸ்லிம் தலைவர்கள் இணைந்து கொண்டமை நோக்கத்தக்கது. குறிப்பாக, ரி.பி.ஜாயா மற்றும் சேர்.ராசிக் பரீட் போன்றவர்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தது என்றே கூறலாம். இவர்களுடன் முஸ்லிம் குடிமக்கள் நாடு தழுவிய அளவில் பல பாகங்களிலும் இடம்பெற்ற சுதந்திர இயக்கப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு தாமும் தேசத்தின் பெரும்பான்மை மக்கள்பால் உள்ளனர் என்பதை பறைசாற்றி நின்றனர்.

இலங்கையில் சுதந்திரத்தை அடைந்து கொள்வதற்கான போராட்ட இயக்கமானது இந்தியாவில் மகாத்மா காந்தியின் தலைமையில் நடந்தேறிய ஒரு பெரும் மக்கள்மயமான போராட்டத்தைப் போன்றதாக இல்லாவிட்டாலும் இலங்கை தேசிய காங்கிரஸ் தலைமையில் ஒரு தேசிய இயக்கம் செயற்பட்டுக் கொண்டே இருந்தது. தேசிய காங்கிரஸில் முஸ்லிம்களும் அதிகளவில் அங்கம் வகித்திருந்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் பல முஸ்லிம்கள் அதன் நிர்வாக பதவிகளிலும் இருந்து வந்துள்ளதனை அவதானிக்க முடிகிறது. எனவே, இலங்கையின் சுதந்திர இயக்கத்தில் முஸ்லிம் தலைவர்களின் பங்களிப்பு அதிகளவில் இருந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சுதந்திர இலங்கைக்கான போராட்டத்தின் ஒரு நடவடிக்கையாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் முன்மொழியப்பட்ட ‘சிங்களத்தை அரச கரும மொழியாக’ ஏற்றுக் கொள்ளும் பிரேரணைக்கு முஸ்லிம் பிரதிநிதியான சேர்.ராசிக் பரீட் ஆதரவு தெரிவிக்க வந்தமையும் அவ்வாறே ‘ஸ்ரீ லங்கா மசோதாவு’ வுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள் ஆதரவு தெரிவிக்க வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பல இனத்தவர்களும் சேர்ந்து தேசிய இயக்கத்தை முன்னெடுத்துச் சென்று சுதந்திரத்துக்கான கோரிக்கையை முன்வைத்த சந்தர்ப்பத்தில் 1943 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை அரச சபையின் அமைச்சரவை பிரித்தானிய அரசாங்கத்திடமிருந்து இலங்கையின்

அரசியலில் மாற்றங்களைக் கொண்டுவருவதென்ற வாக்குறுதியை பெற்றது. அமைச்சரவையினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் மாற்றங்களை பரிசீலனை செய்வதற்கு இலங்கையின் எல்லாச் சமூகங்களினதும் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது அபிப்பிராயங்களையும் அறியும் பொருட்டு ஓர் ஆணைக்குழுவை நியமிக்க பிரித்தானிய அரசாங்கம் முடிவு செய்தது (1944 இல் ஆணைக்குழு இலங்கைக்கு வந்தது). இக்காலப்பகுதியில் இலங்கையின் சுதந்திரப் பாதையில் டொமினியன் அந்தஸ்தை பெறுவதில் எல்லாச் சமூகங்களும் கட்சிகளும் இயக்கங்களும் ஆர்வத்தைக் காட்டலாயின.

ஆனாலும், அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் மாற்றத்திற்கான பிரேரணை அரச சபையிலுள்ள மூன்றில் இரண்டுக்கும் அதிகமானோரின் ஆதரவைப் பெற வேண்டும் என்று பிரித்தானிய அரசாங்கம் கட்டளையிட்டபோது சிறுபான்மையினரின் ஆதரவு இன்றியமையாதது என்பதை சிங்கள தலைவர்கள் உணர்ந்தனர். இச்சந்தர்ப்பத்தில் அப்போதிருந்த முஸ்லிம் தலைவர்களின் பேராதரவு அதற்கு கிடைத்தமை நோக்கத்தக்கது. 1945 நவம்பரில் 'ஸ்ரீ லங்கா மசோதா' அரச சபையில் விவாதிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அகில இலங்கை சோனக சங்கத்தின் தலைவரும் அரச சபையின் முஸ்லிம் பிரதிநிதியாக இருந்தவருமான சேர்.ராசீக் பரீட் பிரேரணையை ஆதரித்துப் பேசிய விடயம் தேசத்தின் விடுதலைக்காகவும் தேசிய ஒழுமைப்பாட்டுக்காகவும் முஸ்லிம்கள் எவ்வளவு அவாவைக் கொண்டிருந்தார்கள் என்பதை பறைசாற்றி நின்றது.

> "1936 ஆம் ஆண்டை ஞாபகமூட்ட விரும்புகிறேன். இந்த அரச சபைக்கு அன்று நடந்த பொதுத் தேர்தலில் சோனகர்கள் ஒரு பிரதிநிதியையாவது அனுப்ப முடியவில்லை. தமிழ் சமூகம் 40,000 சோனக வாக்காளர்கள் இருக்கும் தொகுதிகளான மன்னார், மட்டக்களப்பு தெற்கு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து தமிழ் பிரதிநிதிகளைத்தான் அனுப்பினார்கள். தமிழ் சமூகம் எங்களுக்கு எதையாவது செய்தார்களா? இருந்தும் நாம் தமிழ் அங்கத்தினர்களினை ஒன்றாகவே கருதி வந்தோம்.
>
> இந்த நாட்டில் வாழும் 5 இலட்சம் சோனகர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐம்பது கிளைகளைக் கொண்ட 'அகில இலங்கை சோனகர் சங்கத்தின்' கௌரவ தலைவருடைய இந்த தீர்மானத்திற்கு எமது ஆதரவினை அளிக்கும்படி எனக்கு அக்கடமையை ஒப்படைத்திருக்கிறார்கள். எனக்கு இதைவிட இன்பம் தரக்கூடிய வேறொன்றும் இல்லை. எனது மனப்பூர்வமான ஆதரவை கௌரவ சபைத் தலைவரின் பிரேரணைக்கு அளிக்க விரும்புகிறேன். என்னுடைய சமூகமும் நானும் அவருக்கு உறுதுணையாகவே இருந்து வந்திருக்கின்றோம். வெற்றி பெறும் இத்தருணத்தில், அவரோடு கைகோர்த்துக் கொண்டு டொமினியன் அந்தஸ்தை நோக்கி நாம் முன்னேறத் தயார் என்பதை கூற விரும்புகிறேன்.
>
> சிங்கள சகோதர–சகோதரிகளைப் போல் இலங்கைச் சோனகர்கள் இலங்கைத் தாய் நாட்டின் தவப்புதல்வர்கள் ஆவர். இத்தவத்திருநாட்டில் கடந்த சில நூற்றாண்டுகளாக சிங்கள மக்களும் சோனகர்களும் ஒற்றுமையுடனும் பரஸ்பர அன்புடனும் வாழ்ந்து வருகின்றார்கள். கடந்த காலத்தில் பல தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். நான் அதைப்பற்றி இப்போது பேச விரும்பவில்லை. இன்றைய அறிவு யுகத்தில் எந்தப் பிரச்சினையும் நல்லெண்ணத்துடனும் ஒற்றுமையுடனும் நாம் அணுகினால் அதைத் தீர்க்க முடியும். எனவே, எமது சினேகக் கரங்களை எமது சிங்கள சகோதரர்களுக்கு நீட்டுகிறோம்.
>
> காங்கேசந்துறை அங்கத்தவரும் (நடேசன்), மன்னார் அங்கத்தவரும் (தியாகராஜா) ஆற்றிய இரங்கத்தக்க சொற்பொழிவுகளுக்குப் பிறகு சோனகர்களாகிய நாம் சிங்களவரைத் தவிர்ந்த ஏனையவர்களினால் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை கூறக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ் சமூகத்திற்கு தேறுதல் கூறும் வகையில்தான் நான் இந்த சொற்பொழிவை ஆற்றுகின்றேன். எங்களுடைய பிரதிநிதித்துவம் இல்லாமலேயே எங்களைப் பற்றிய குறிப்புக்கள் கூறப்படுகின்றன. சோனகர்கள் தமிழ் பேசும் மக்கள் ஆகையால் தமிழர்கள் எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தலாம் என்று ஒரு காலகட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு தலைவணங்க வேண்டியிருந்தது.
>
> நாங்கள் பல கஸ்டங்களை அனுபவித்திருக்கிறோம். ஆனால் அவற்றில் பத்தில் ஒரு பங்கையாவது நீங்கள் பட்டிருக்கவில்லை........ சிறுபான்மையினங்களின் ஆதரவினைப் பெற வேண்டும் என்ற இங்கிலாந்து அரசாங்க நிபந்தனை புதிய அரசியலமைப்பில் சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதே.... ....டொமினியன் அந்தஸ்தை வேண்டி நிற்கும் சிங்கள மக்களின் நியாயபூர்வமான

கோரிக்கைக்கு நாம் பக்கபலமாக இருக்கிறோம். எனவே சிங்களவர், தமிழர், சோனகர் ஆகிய நாம் எல்லோரும் டொமினியன் அந்தஸ்தை நோக்கி பிரித்தானிய பொது நலவாய நாடுகளின் சங்கத்தில் ஓர் அங்கத்தவராக எமது தாய்த்திருநாடாம் இலங்கை பெருமையுடன் வீற்றிருக்கச் செய்வோமாக....." (Farook, 2014; முகம்மது சமீம், 1998; Mttukumar, 1963).

'ஸ்ரீ லங்கா மசோதா' பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு வந்தபோது முஸ்லிம் பிரதிநிதியான ரீ.பி. ஜாயா பேசும் போது அவரும் மற்றய முஸ்லிம் பிரதிநிதிகளுடன் சேர்ந்து தேசத்தின் சுதந்திரத்துக்கான தனது சமூகத்தின் பேராதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

"முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் முழு ஆதரவுடனும் நான் பேசுகிறேன்.... 'ஸ்ரீ லங்கா மசோதா' சபையில் விவாதத்துக்கு எடுக்கப்பட்ட சமயம் ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் இம்மசோதாவை ஆதரிப்பது என சபையிலுள்ள முஸ்லிம் அங்கத்தினர்கள் முடிவெடுத்தார்கள். இந்நாட்டின் அரசியல் சுதந்திரத்தைப் பொறுத்தவரையில் எமது இந்த கொள்கையினால் எம்முடைய சமூகத்துக்கு கிடைக்க இருந்த நன்மைகளையும் நலன்களையும் நாம் தியாகம் செய்யத் தயார் என்பதே அக்காரணமாகும்" என்றார் (பார்க்க: Farook, 2014; முகம்மது சமீம், 1998).

மேற்படி இருவரதும் பேச்சுக்களை அவதானிக்கும்போது முஸ்லிம் தலைவர்கள் சுதந்திர இலங்கையை அடைந்து கொள்வதில் கொண்டிருந்த ஆர்வத்தினை நன்கு தெரிந்து கொள்ளலாம். 1945 நவம்பர் 09 ஆம் திகதி இந்த மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது எல்லா முஸ்லிம் பிரதிநிதிகளும் (03 பேர்களும்) அதற்கு ஆதரவளிக்க வந்தமை நோக்கத்தக்கது. உண்மையில், இலங்கையின் சுதந்திர இயக்க செயற்பாடுகளில் முஸ்லிம் தலைவர்களின் பங்களிப்பும் அதிகளவில் இருந்ததை யாரும் மறுத்துவிட முடியாது. பண்டாரநாயகா மற்றும் சேனநாயகா போன்ற சிங்கள தலைவர்கள் இதற்காக முஸ்லிம் தலைவர்களைப் பாராட்டியிருந்தமை நோக்கத்தக்கது (பார்க்க: Farook, 2014).

அவ்வாறே, சுதந்திர இலங்கைக்கான அரசியலமைப்பும் சீர்திருத்தத்தினை வழங்கும் நோக்கில் பிரித்தானிய அரசாங்கம் ஓர் ஆணைக்குழுவினை அனுப்பியபோது அதன் முன் முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் பல்வேறு குறைகளை எடுத்துக்கூறி அவர்களின் அரசியல் பலத்தினைக் அதிகரிக்க முயற்சித்த அதேவேளை சுதந்திரத்துக்கு வழிகாட்டியாக முன்வைத்த சோல்பரி அரசியல் திட்டத்துக்கும் தமது ஆதரவினை தெரிவிக்கலாயினர். உண்மையில், நாட்டின் சுதந்திரப் போராட்டத்தையும் அரசியல் சீர்திருத்தத்தையும் கேள்விக்குட்படுத்தாத வகையில் முஸ்லிம்கள் நடந்து கொண்டதுடன் அவற்றுக்கான தமது முழுமையான ஆதரவையும் வழங்கியிருந்தனர் என்பது நோக்கத்தக்கது.

## 5. இன முரண்பாட்டுச் சூழலில் தேசிய ஐக்கியத்துக்கான முஸ்லிம்களின் பங்களிப்பு

இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நடைபெற்ற இனமுரண்பாடும் உள்ளூர் யுத்தமும் இலங்கை முஸ்லிம்களின் குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்களின் வாழ்வில் தவிர்க்க முடியாத தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது. இன முரண்பாட்டிலும் சிவில் யுத்தத்திலும் முஸ்லிம்கள் நேரடித் தரப்பாக பங்குபெறாதபோதும் யுத்தத்தின் தாக்கத்தினை பல வழிகளிலும் முஸ்லிம்கள் சந்திக்கலாயினர். ஆரம்பத்தில் தமிழ் மக்களுடன் இணைந்து அரசியல் நீரோட்டத்திலும் தமிழ்த் தேசியப் போராட்டத்திலும் முஸ்லிம்கள் அளப்பெரிய பங்களிப்பைச் செய்திருந்தபோதிலும் 1980 களில் கூர்மையடைந்த இன முரண்பாடும் ஆயுதமுனைப் போராட்டமும் வன்முறையும் முஸ்லிம்களை தமிழ் போராட்டக் குழுக்கள் நேரடியாகத் தாக்கும் நிலையை உருவாக்கியது.

முஸ்லிம்கள் தங்களுக்காக தனியான அரசியல் தளத்தினை உருவாக்க முற்பட்டதும் சிங்களவர்களோடும் அரசாங்கத்தோடும் சேர்ந்து தமிழ் மக்களின் விடுதலைக்கு எதிரான முஸ்லிம்கள் செயற்படுகிறார்கள் என்று தமிழர்களைச் சந்தேகிக்கத் தூண்டியதாலும் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள் மேலும் அதிகரித்தன. முஸ்லிம்களது வாழ்வாதாரம் பெரிதும் தாக்குதலுக்கும் பாதிப்புக்கும் உட்பட்டது. 1990 களின் ஆரம்பத்தில் கிழக்கின் பல கிராமங்களில் நூற்றுக்கணக்கான அப்பாவி முஸ்லிம்கள் கொல்லப்பட்டதும் வடக்கு மாகாணத்தில் காலாதிகாலமாக வாழ்ந்துவந்த முஸ்லிம்கள் முழுவதையும் இழந்த நிலையில் முற்றாகத் துரத்தியடிக்கப்பட்டதும் இன முரண்பாட்டால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட

தாங்கமுடியாத் துயரங்களை பறைசாற்றி நின்றன (பார்க்க: Yusoff, Nordin & Sarjoon, 2014; Yusoff, Sarjoon & Zain, 2018; Yosoff et al., 2018).

உண்மையில், இனமுரண்பாட்டாலும் உள்ளூர் யுத்தத்தாலும் ஏற்பட்ட துன்பங்களையும் துயரங்களையும் தாங்கிக்கொண்டிருந்த முஸ்லிம்கள் நாட்டின் ஐக்கியத்தை சீர்குலைப்பதற்கோ முரண்பாடுகளையும் வன்முறைகளையும் தூண்டிவிடுவதற்கோ ஒருபோதும் முயற்சிக்கவில்லை. தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சில சிறு அளவிலான தாக்குதல்களை ஆங்காங்கே மேற்கொண்ட போதும் முஸ்லிம் அரசுக்கு எதிராகவோ அல்லது தமிழ் தேசிய விடுதலைக்காக போராடியவர்களைத் தாக்குவதற்காகவோ குழுவாக ஒன்று திரண்டு வன்முறையிலோ அல்லது ஆயுதப் போராட்டத்திலோ ஈடுபடுவதை முனைப்பாகச் செய்யவில்லை. தங்களுக்கு எதிரான பல்முனைத் தாக்குதல்களுக்குள்ளும் நெருக்கடிகளுக்குள்ளும் சமாதான வழியில் அரசியல் ரீதியில் நீதியையும் நிவாரணத்தையும் பெறுவதற்கே முஸ்லிம்கள் முயற்சித்து வந்துள்ளனர். அதற்காகவே முஸ்லிம் அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கி அதனூடாக தமது பிரச்சினைகளை அணுக வந்தனர் (பார்க்க: Yusoff et al., 2018). மாறாக, அரசுக்கோ அல்லது இராணுவப் படையினருக்கோ முஸ்லிம்கள் ஒருபோதும் ஆயுத ரீதியில் பெரும் சவாலாகவிருந்து தேசம் சீர்குலைவுக்குட்பட முயற்சிக்கவில்லை என்பது நேக்கத்தக்கது.

இனங்களுக்கிடையிலான முரண்பாட்டுச் சூழலே முஸ்லிம்களை தனி இனத்துவ அரசியலுக்கு கொண்டு சென்றாலும் அஸ்.ஃரப் போன்ற அரசியல் தலைவர்கள் தாம் சார்ந்திருந்த இனக்குழுவுக்கும் அப்பால் பல இனக்குழுக்களையும் ஒன்றிணைத்து அரசியல் செய்வதற்கும் அவர் பின்னர் அமைச்சராக பணியாற்றியபோது தனது அமைச்சுக்கள் ஊடாக யுத்தத்தாலும் வன்முறையாலும் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களது மீட்சிக்காகவும் பாடுபட்டார் என்பது நோக்கத்தக்கது (பார்க்க: Yusoff et al., 2018). அஸ்ர.ஃப் போன்ற முஸ்லிம் தலைவர்கள் இனத்துவ அரசியலை தேசிய அளவில் கூர்மைப்படுத்தியவர்கள் என்ற வாதத்தை பலரும் முன்வைப்பதுண்டு. ஆனால், அஸ்ர.ஃப்புக்கு முன்பே இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் தலைவர்களே இனத்துவ கட்சிகளை உருவாக்கி இனத்துவ அரசியலை முன்னிலைப்படுத்தி உள்ளனர் என்பது வரலாற்று உண்மையாகும். உண்மையில், அஸ்ர.ஃப் விரும்பியிருந்திருந்தால் அப்போது இன வன்முறையாலும் யுத்தத்தாலும் இனத்துவ அரசியல் ஓரங்கட்டலாலும் பெருமளவில் விரக்தியடைந்திருந்த முஸ்லிம் இளைஞர்களை இலகுவில் வன்முறைக்கும் அவ்வாறே நாட்டின் பெரும்பான்மை இனக்குழுக்களுக்கு எதிராகவும் திசைதிருப்பி ஆயுதக் குழுக்களாக அவர்களைத் திரட்டியிருக்க முடியும். ஆனால், அம்முஸ்லிம் இளைஞர்களை ஜனநாயக அரசியலின்பால் திசைதிருப்பி நெருக்கடியான காலகட்டததில் நாட்டின் வன்முறைக் கலாசாரம் தீவிரமடைவதையும் நாடு மேலும் அழிவுக்கு உட்படுவதையும் அஸ்ர.ஃப் தடுத்திருந்தார் என்பதே யதார்த்தமாகும்.

இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்தேறிய காலகட்டத்தில் கூட குறிப்பாக நோர்வேயின் அனுசரணையின் கீழ் யுத்த நிறுத்தமும் சமாதானப் பேச்சுவார்த்தைகளும் நடந்தேறிய காலப்பகுதியில் (2002-2004) ஒப்பீட்டளவில் முஸ்லிம் சமூகம் அதிக இழப்புக்களையும் சவால்களையும் சந்திக்கலானது. இச்சந்தர்ப்பத்தில் வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் என்பன மிகவும் கேள்விக்குள்ளாகியிருந்தன. பேச்சுவார்த்தைகளில் அரசாங்கமோ அல்லது தமிழீழ விடுதலைப் புலிகளோ முஸ்லிம்களை ஒரு பங்குதாரராக சேர்த்துக்கொள்ள விருப்பியிருக்கவில்லை (பார்க்க: Yusoff, Hussin & Sarjoon, 2014). முஸ்லிம் சமூகம் அனாதரவாக விடப்பட்டதாக உணர்ந்திருந்தனர். அப்போது கூட முஸ்லிம்கள் தங்களது விரக்தியை வன்முறை ஊடாக வெளிப்படுத்தாது ஜனநாயகப் போராட்டம் மற்றும் அரசியல் ரீதியிலான அணுகுமுறை ஊடாகவே தமது பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டனர். வன்முறையைக் கையிலெடுத்து ஆட்சியாளருக்கும் மற்றய தரப்பினருக்கும் எதிர்ப்பை வெளிப்படுத்தி சமாதான சூழ்நிலையையோ சமாதான பேச்சுவார்த்தைகளையோ சீர்குலைக்க அவர்கள் முற்படவில்லை.

சிவில் யுத்தத்தின் இறுதிக் காலகட்டத்தில் கூட குறிப்பாக கிழக்கில் முஸ்லிம்களை மனிதக் கேடயமாக வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல்களைத் தொடுத்தபோதும் அட்டூழியங்களைச் செய்தபோதும் முஸ்லிம்கள் அதற்கான துலங்கல்களை வன்முறையால் மேற்கொள்ளவில்லை. ஒரு கட்டத்தில் (2006) கிழக்கு மாகாணத்தில் மூதூர் மற்றும் தோப்பூர் போன்ற கிராமங்களிலிருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு உயிரிழப்புக்கள் உட்பட பல்வேறு இழப்புக்களையும் சந்தித்து மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால், அதற்கான துலங்கல்களை முஸ்லிம்கள் வன்முறையாலோ அல்லது இன எதிர்ப்பினூடாகவோ

வெளிக்காட்டவில்லை. குறிப்பாக, இறுதி யுத்தக் காலப்பகுதியில் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் மக்களும் தங்களது பகைகளை மறந்து இலங்கை அராசங்கத்தின் அத்தனை நடவடிக்கைகளுக்கும் துணையாக இருந்ததுடன் பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து தேசத்தை விடுவிப்பதற்கான முயற்சியில் தமது பங்களிப்பையும் செய்திருந்தனர். இதன்போது, அவர்கள் தமது சகோதர பெரும்பான்மையின மக்களுடன் எவ்விதமான பகை உணர்வையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

இன முரண்பாட்டினாலும் யுத்தத்தினாலும் முஸ்லிம்கள் பல்வேறு இழப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்தபோதிலும் இலங்கைத் தேசத்தின் ஐக்கியத்துக்கு குறிப்பாக ஆள்புல, தேசிய மற்றும் இனத்துவ ஒருமைப்பாட்டுக்கு முஸ்லிம்கள் ஒருபோதும் சவாலாக இருந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உண்மையில், முஸ்லிம்களும் ஆயுதக் குழுக்களாக உருவெடுத்து அரசாங்கத்துக்கும் அரச படைகளுக்கும் எதிராகப் போராடியிருந்திருந்தால் இலங்கையின் இன முரண்பாட்டின் தீவிரம் மிகவும் வன்மையடைந்திருந்திருக்கும் என்பதுடன் தேசிய மற்றும் இன ஐக்கியமும் ஒருமைப்பாடும் தேசத்தின் ஆள்புல ஒருமைப்பாடும் பெருமளவுக்கு சீர்குலைந்திருந்திருக்கும் என்பது யதார்த்தமானது.

## 6. சிவில் யுத்தத்துக்குப் பின்னரான காலகட்டத்தில் முஸ்லிம்கள்: வெறுப்பு உணர்ச்சியிலும் வன்முறைத் தாக்குதலிலும் சகவாழ்வு வாழ்தல்

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான உள்ளூர் யுத்தத்தின் வெற்றி என்பது சிங்கள மக்களைப் பொறுத்தவரையில் பெருவெற்றியாகவே கொண்டாடப்பட்டது. ஆனால், அது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகப்பெரும் வரலாற்றுத் தோல்வியாக நோக்கப்பட்டது. எப்படியிருப்பினும் போர் வெற்றி விடயத்தில் பெரும்பாலான முஸ்லிம்கள் நடுநிலைப் போக்கையே கடைப்பிடித்தனர். அரசாங்கத்தின் போருக்குப் பின்னரான அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கச் செயற்பாட்டில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தொடர்ந்தும் ஆதரவு தெரிவித்துக் கொண்டேயிருந்தனர். குறிப்பாக சில முஸ்லிம் அமைச்சர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். அவ்வாறே, தமிழ் மக்களின் தோல்வியை முஸ்லிம்கள் கொண்டாடாது போருக்குப் பின்னரான காலங்களில் சமூக ரீதியிலும் அரசியல் ரீதியிலும் தமிழ் தலைமைகளுடன் இணைந்து செயற்படுவதற்கு தமது ஆர்வத்தை வெளிப்படுத்திச் செயற்பட்டு வந்துள்ளனர்.

ஆனால், போருக்குப் பின்னர் எழுச்சி பெற்ற மத ஆதிக்க தேசியவாதத்தின் எழுச்சியினால் முஸ்லிம்கள் பெருமளவில் இலக்குவைக்கப்பட்டனர். முஸ்லிம்களின் பூர்வீகம், தேசத்துக்கான அவர்களின் பங்களிப்பு, அவர்களின் மதம், மத அடையாளம், மதச் சடங்குகள், நம்பிக்கைகள், அடிப்படைகள், மரபுகள் மற்றும் நடைமுறைகள் என்பன பெருமளவில் விமர்சனத்துக்கும் எதிர்ப்புக்கும் கேள்விக்கும் உட்படுத்தப்பட்டன. இதன் எதிரொலியாக முஸ்லிம்கள் மீதும் அவர்களது மத மற்றும் வியாபாரத் தளங்கள் மீதும் பாரியளவிலான தாக்குதல்கள் தொடர்ந்தும் தொடுக்கப்பட்டன (பார்க்க: Ramees, 2018; Sarjoon, Yusoff & Hussin, 2016; Yusoff & Sarjoon, 2017).

முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு எதிர்ப்புக்களும் சவால்களும் எழுச்சி பெற்று மத அடிப்படைவாத மற்றும் தேசியவாதக் குழுக்களால் தேசிய அளவில் வெறுப்புணர்ச்சியும் வன்முறையும் தீவிரமாகத் தூண்டப்பட்ட வேளையிலும் முஸ்லிம்களும் அவர்களின் தலைவர்களும் யுத்தத்தின் பின்னரான அரசின் நல்லிணக்க, அபிவிருத்தி மற்றும் அரசியல் தீர்வு முயற்சிகளைக் கவனத்திற் கொண்டு தொடர்ந்தும் அமைதியாகவே செயற்பட்டனர். உண்மையில், முஸ்லிம்களுக்கும் அவர்களது மத மற்றும் கலாசார சுதந்திரத்துக்கும் எதிராக பௌத்த தேசியவாத இயக்கங்களால் வெறுப்புணர்ச்சியும் வன்முறையும் தூண்டப்பட்ட சந்தர்ப்பத்தில் முஸ்லிம் இளைஞர்களும் வன்முறையையும் ஆயுதங்களையும் கையில் எடுத்திருந்தால் அல்லது அவ்வாறு செய்யும்படி முஸ்லிம் அரசியல்வாதிகளால் தூண்டப்பட்டிருந்தால் இலங்கைத் தேசம் இன்னுமொரு தடவை வன்முறைக் கறைபடிந்த இருண்ட யுகத்துக்குள் சென்றிருந்திருக்கும். அதனால், அரசாங்கத்தின் யுத்தத்துக்குப் பின்னரான நல்லிணக்க மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் சீர்குலைவை அடைந்து முழு உலகத்தினாலும் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டிருந்திருக்கும். தங்களுக்கு எதிரான வன்முறைத் தாக்கங்களின் போது தங்களைப் பாதுகாக்க முஸ்லிம்கள் வன்முறையை நாடாததன் ஊடாக யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையில் கூட தேசத்தின்

ஒருமைப்பாட்டுக்கும் சமூக இணக்கத்துக்கும் அமைதிக்கும் களங்கம் ஏற்படாவண்ணம் முஸ்லிம்கள் செயற்பட்டுள்ளனர் என்பதே யதார்த்தமாகும்.

## 7. முடிவுரை

இலங்கையில் சிறுபான்மை இனக்குழுவாகவும் நாடு முழுவதும் பரவலாகவும் மற்றய இன மக்களுடன் இரண்டறக் கலந்தும் வாழும் முஸ்லிம்கள் பல நூற்றாண்டு வரலாற்றுப் பாரம்பரியத்தையும் அடையாளத்தையும் கொண்டுள்ளனர் (பார்க்க: சர்ஜூன், 2017). இலங்கையின் இனத்துவ மற்றும் கலாசார பன்மைத்துவத்துக்கும் அதன் பல்லின சமூகங்களுக்கிடையேயான இணக்கப்பாட்டுக்கும் தேசத்தின் ஆள்புல ஒருமைப்பாட்டை கட்டிக் காப்பதற்கும் முஸ்லிம்கள் தொடர்ந்தும் தமது பங்களிப்பையும் அர்ப்பணிப்பையும் செய்தே வந்துள்ளனர். சுதேசிய மன்னர்களின் ஆட்சிக் காலத்தின்போது முஸ்லிம்களின் நாணயமும் நாட்டுப் பற்றும் ஆட்சியாளர்களாலும் பெரும்பான்மை மக்களாலும் முஸ்லிம்கள் நேசிக்கப்படவும் சலுகைகள் வழங்கப்படவும் காரணமாக அமைந்திருந்தது. நாடு ஐரோப்பிய காலணித்துவவாதிகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தபோது முஸ்லிம்கள் பல வழிகளிலும் ஒடுக்கப்பட்டபோதும் பெரும்பான்மை இனக்குழுக்களுடன் தொடர்ந்தும் இணைந்திருந்ததோடு தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருந்தனர். சுதந்திரத்துக்குப் பின்னரான காலத்தில் விசேடமாக இன முரண்பாடு கூர்மையடைந்து உள்ளூர் யுத்தமாக மாற்றமுற்றபோதும் அது முஸ்லிம் சமூகத்தை பெருமளவில் பல வழிகளில் பாதித்தபோதும் அவ்வாறே, சிவில் யுத்தத்துக்குப் பின்னரான காலத்தில் மதத் தேசியவாத தீவிரப் போக்கிலான குழுக்களால் முஸ்லிம்களின் மத அடிப்படைகளும் நடைமுறைகளும் தீவிரமாக கேள்விக்குட்படுத்தப்பட்டு முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புணர்வுகள் ஊட்டப்பட்டு கடுமையான வன்முறைத் தாக்குதல்களுக்கு உட்பட்ட போதிலும் முஸ்லிம்கள் வன்முறையால் தமது துலங்கலை வெளிப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே, முஸ்லிம்கள் ஆயுத ரீதியாக ஒன்றுசேர்ந்து பெரும்பான்மையின மக்களுக்கு எதிராகவோ அல்லது அரசாங்கத்துக்கு எதிராகவோ தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருக்கவில்லை. மாறாக, சாத்வீக ரீதியிலும் ஜனநாயக அரசியல் ரீதியிலும் தொடர்ந்தும் செயற்பட்டு வந்துள்ளதோடு தேசத்தின் ஒருமைப்பாடும் சமூக இணக்கமும் தொடர்ந்தும் கட்டிக்காக்கப்பட தம்மாலான பங்களிப்பைச் செய்தும் வந்துள்ளனர். இது இலங்கை முஸ்லிம்களின் வரலாற்று ரீதியான அமைதிப் போக்கையும் தேசத்துக்கும் அரசுக்கும் சமூக இணக்கப்பாட்டுக்கும் அவர்கள் அர்ப்பணிப்போடு இருந்து வந்துள்ளதையுமே சுட்டிக்காட்டுகிறது. ஆதலால், வரலாற்றுத் தொடர்ச்சியாகவுள்ள முஸ்லிம்களின் இந்த நற்பண்புகள் மீள்வாசிப்புக்கு உட்படுத்தப்படுவதும் புரிந்துகொள்ளப்படுவதும் நினைவுகூரப்படுவதும் முஸ்லிம்கள் மீதான தப்பபிப்பிராயங்கள் களையப்படுவதற்கும் போருக்குப் பின்னரான நல்லிணக்கச் செயன்முறையில் இனங்களுக்கிடையிலான உறவையும் தேசிய ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்புதலிலும் அத்தியாவசியமானது என்பதில் சந்தேகமில்லை.

**உசாத்துணைகள்**


Abdul Azeez, I.L.M. (1907). *Criticism of Mr. Ramanathan's Ethnology of the Moors of Ceylon.* 1907 (1956R). Colombo: Colombo Moors' Union.

Ali, A. (2014). Muslims in Harmony and Conflict in Plural Sri Lanka: A Historical Summary from a Religio-economic and Political Perspective. *Journal of Muslim Minority Affairs*, 34:3, 227-242.

Devaraj, L.S. (1986). The Muslims in the Kandiyan Kingdom (1600-1815): A Study of Ethnic Intergration. In M.A.M. Shukry (Ed.). *Muslims of Sri Lanka: Avenue to Antiquity*. (pp. 88-119). Beruwela: Jamia Naleemiya Institute.

Dewaraja, L. (1994). *Muslims of Sri Lanka: One Thousand Years of Ethnic Harmony-900-1915*. Colombo: The Lanka Islamic Foundation.

Farook, L. (2017). Unconditional Muslim Support: Facilitated Island's Independence. *Colombo Telegraph*. Retrived from: https://www.colombotelegraph.com/index.php/unconditional-muslim-support-facilitated-islands-independence-2/ (Accessed on 10.01.2019).

Imtiyaz, A. R.M & Hoole, S. R.H. (2011). Some Critical Notes on the Non-Tamil Identity of the Muslims of Sri Lanka, and on Tamil-Muslim Relations. *South Asia: Journal of South Asian Studies*, 34:2, 208-231.

Mutukumar, N. (1963). *This Man Rasik*. Colombo: Author's Publication.

Rameez, A. (2018). Resurgence of Ethno-Religious Sentiment against Muslims in Sri Lanka: Recent Anti-Muslim Violence in Amparai and Kandy. *Journal of Politics and Law,* 11(4), 27-39.

Sarjoon, A., Yusoff, M.A., & Hussin, N. (2016). Anti-Muslim Sentiments and Violence: A Major Threat to Ethnic Reconciliation and Ethnic Harmony in Post-war Sri Lanka. *Religions*. 7, 125, 1-18.

Vamadevan V, (1999), *The Story of the Sri Lankan Muslims*. Sydney: Auther's Publication.

Yusoff, M.A & Sarjoon, A. 2017. Anti-Halal and Animal Slaughtering Sentiment and Their Impact in Post-War Sri Lanka. *Relgions*, 8, 46, 1-15.

Yusoff, M.A., Hussin., N & Sarjoon, A. (2014). Positioning Muslims in Ethnic Relations, Ethnic Conflict and Peace Process in Sri Lanka. *Asian Social Science*, 10(10), 199-211.

Yusoff, M.A., Sarjoon, A., & Zain, Z.M. (2018). Resettlement of Northern Muslims: A Challenge for Sustainable Post-war Development and Reconciliation in Sri Lanka. *Social Sciences*. 7, 106, 1-20.

Yusoff, M.A., Sarjoon, A., Hussin, N & Mohammad Ghazali, Z.A. (2016). Ethnicity, Minority and Group Consciousness: An Examination of Ethnic Group Formation of Sri Lankan Muslims Through Conceptual Analysis. *The Social Sciences*, 11(7), 1322-1330.

Yusoff, M.A., Sarjoon, A., Hussin., N & Ahmed, A. (2018). Analyzing the Contribution of Sri Lanka Muslim Congress and Its Founder-Leader to Muslim Politics and Community in Sri Lanka. *Social Sciences*, 6, 120, 1-21.

அமீன், எம்.ஐ.எம். (2000). *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாச்சாரமும் (1870-1915).* ஹெம்மாத்தகம: அல்ஹசனாத் பதிப்பகம்.

சர்ஜூன், ஆ. (2017). இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகமும் இன தனித்துவமும்: ஒரு வரலாற்று மீள் நோக்கு. *நவீன தமிழாய்வு,* 5(2), 203-213.

சுக்ரி, எம்.ஏ.எம். (1995). வரலாற்றுப் பாரம்பரியம். முஸ்லிம் கலாசார திணைக்களம். *மாத்தறை மாவட்ட முஸ்லிம்கள்.* கொழும்பு: முஸ்லிம் கலாசார திணைக்களம்.

முஹம்மது சமீம், ஏ. (1998). *ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகள் (பகுதி-3).* கொழும்பு: நிஸானா பப்ளிஸர்ஸ்.

ரிம்சான் ஹம்தூன். (1998). *இலங்கை முஸ்லிம்களின் கல்வியும் அரசியலும்.* பேருவளை: அல்கலாம் பதிப்பகம்.